6. அரசினர் தீர்மானம்— தொடர்ச்சி.

(ஆ) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் 16-16 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

183. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு மாநகராட்சி வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு [அலுவல்களை மேற்கொள்ளுதல்] விதி களில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் —குடிநீர் வழங்கல் துறையின் 21—6—1989 ஆம் நாளிட்ட 367-ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

184. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றங்கள் (வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல், விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் — குடிநீர் வழங் கல் துறையின் 28—7—1989 ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம்ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

185. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17—3—1986 ஆம் நாளிட்ட IX (1)-வ.வ.ச.அ./47 (சே) 86/ஆம்